தட்டாஞ்சாவடி தொகுதி தி.மு.க. வேட்பாளர்

சேது செல்வத்தை ஆதரித்து தி.மு.க. - கூட்டணி கட்சித் தலைவர்கள் இறுதிக்கட்டப் பிரச்சாரம்!



புதுச்சேரி, அக். 4-

தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் சேது செல்வத்தை ஆதரித்து தேர்தல் பொறுப்பாளர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் க.பொன்முடி, தி.மு.க. அமைப்பாளர் இரா. சிவா ஆகியோர் தலைமையில் தி.மு.க., கூட்டணிக் கட்சித் தலைவர்கள் 31 பூத்துகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

தேர்தல் பிரச்சாரம் நாளை மாலை 5.00 மணியுடன் முடிவடைய உள்ளதால், நேற்று மாலை பொய்யாக்குளம் பகுதியில் தேர்தல் பொறுப்பாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் க.பொன்முடி ஆகியோர் தலைமையில் திமுக நிர்வாகிகள் இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். அப்போது தி.மு.க. வேட்பாளர் சேது செல்வத்திற்கு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டு வீடு, வீடாகச் சென்றனர். அப்போது பெண்கள் ஆரத்தி எடுத்தும், மலர்கள் தூவியும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அப்போது வாக்காளர்களிடம் பேசிய தேர்தல் பொறுப்பாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., திமுக துணைப் பொதுச்செயலாளர் க.பொன்முடி ஆகியோர் தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின், தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் திராவிடர் கழகம், தே.மு.தி.க., மக்கள் நீதி மய்யம், எஸ்டிபிஐ உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் ஆதரவு பெற்ற மக்கள் தொண்டன் சேது செல்வத்திற்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களியுங்கள். சேது செல்வம் வெற்றி பெற்றால் தட்டாஞ்சாவடி தொகுதி மக்களுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொள்வார். 20 ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றுள்ள தட்டாஞ்சாவடி தொகுதியை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்வார். மக்களுக்காக பலமுறை சிறை சென்ற சேது செல்வத்திற்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து அதிகபடியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்யுங்கள். இவ்வாறு பேசினார்கள்.

வாக்கு சேகரிப்பின் போது, எதிர்க்கட்சித் தலைவர் ஏ.எம்.எச். நாஜிம், விழுப்புரம் மாவட்டச் செயலாளர்கள் மருத்துவர் ஆ.இலட்சுமணன் எம்.எல்.ஏ., மருத்துவர் பொன்.கௌதமசிகாமணி, தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.செந்தில்குமார், அ.செந்தில் (எ) ரமேஷ், தொகுதி பொறுப்பாளர் டாக்டர் ரோ.நித்திஷ் மற்றும் விழுப்புரம் தெற்கு மாவட்ட நிர்வாகிகள் திருக்கோவிலூர் தங்கம், முகையூர் வடக்கு ரவிச்சந்திரன், தெற்கு லூயிஸ், ராஜ்பவன் தொகுதி செயலாளர் மோகன், தொண்டர் அணி அமைப்பாளர் வீரய்யன், நெசவாளர் அணி அமைப்பாளர் செந்தில் முருகன், தொகுதி அவைத்தலைவர் கணேசன், அஜய்பரத், அயலக அணி சிவா, முன்னாள் இளைஞர் அணி ராஜ், ஐடி விங் சிவதாசன் உள்ளிட்ட பலரும் உடனிருந்து வாக்கு சேகரித்தனர்.

அரசு வழக்கறிஞர் நியமன ஊழல் – பல கோடி ரூபாய் Party Fund வாங்கிய த.வெ.க.?

நீதிமன்றத்தில் அம்பலப்பட்ட த.வெ.க.- வின் மெகா ஊழல் - தூய சக்தியல்ல -TVK ஒரு திருட்டு சக்தி!

தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கை!

சென்னை, அக்.4-

அரசு வழக்கறிஞர் நியமன ஊழல் - பல கோடி ரூபாய் Party Fund வாங்கிய த.வெ.க.? என்றும், நீதிமன்றத்தில் அம்பலப்பட்ட த.வெ.க.-வின் மெகா ஊழல் தூய சக்தியல்ல TVK ஒரு திருட்டு சக்தி என்றும், தி.மு.க. அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

ஊழலை ஒழிக்கும் உத்தம ஆட்சி போல வேடம் போட்ட த.வெ.க. அரசின் முகத்திரையை கிழித்து தொங்கவிட்டுள்ளது நீதி மன்றம். ஆட்சிக்கு வந்தவுடனே அரசு வழக்கறிஞர் நியமனத்தில் Party Fund Collect பண்ண தொடங்கிவிட்டது த.வெ.க. அரசு என பல புகார்கள் எழுந்தன. அரசு வழக்கறிஞர் நியமனத்தில் 5 லட்சம் முதல் 30 லட்சம் வரை வசூலித்ததாக த.வெ.க.வைச் சேர்ந்த வழக்கறிஞர் ஞானசுந்தரி என்பவரே சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார்.

இந்த ஊழல் தொடர்பாக தமிழ் நாடு லஞ்ச ஒழிப்பு துறை விசாரிக்க வேண்டும் என தி.மு.க. துணை அமைப்புச் செயலாளர் ப. தாயகம் கவி அவர்கள் DVAC இல் புகார் அளித்தார். ஆனால் ஊழலை ஒழிக்க வந்த உத்தமர்கள் செய்தது என்ன.? புகார் அளித்த அந்த வழக்கறிஞரை கட்சியை விட்டு நீக்கி விட்டு வழக்கை மூடி மறைக்க பார்த்தனர்.



அரசு வழக்கறிஞர் நியமனத்துக்கு லஞ்சம்!

சமீபத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு வழக்கறிஞர்கள் நியமனங்களுக்கு 15 லட்சம் ரூபாய் வரை லஞ்ச பேரம் நடத்திய தவெக நிர்வாகி அனீஸ் என்பவரது அதிர்ச்சி ஆடியோ வெளியானது. அது தொடர்பாக ஜெகன் ராஜ் என்பவர் தொடர்ந்த வழக்கில் சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை த.வெ.க. அரசை நன்றாய் வெளுத்துள்ளது.

"லஞ்சம் கொடுத்து வழக்கறிஞர்களாக வர வேண்டுமா?" என்றும் "இவர்கள் நாட்டை காப்பாற்று வார்களா அல்லது சட்டத்தைப் பாதுகாப்பார்களா?" என்று கேள்வி எழுப்பி உடனடியாக இப்புகார் மீது தமிழ்நாடு லஞ்ச ஒழிப்பு துறை விசாரணை நடத்த வேண்டும் என உத்தரவிட்டுள்ளது நீதிமன்றம்.

அதோடு "அரசு வழக்கறிஞர் நியமன ஊழல் தொடர்பாக லஞ்ச ஒழிப்புத் துறைக்கு முன்கூட்டியே புகார் அனுப்பப்பட்டும், அவர்கள் ஏன் இன்னும் விசாரணையைத் தொடங்கவில்லை? புகார் வந்தால் விசாரிக்க மாட்டீர்களா? லஞ்சம் தொடர்பான ஆடியோ ஆதாரங்கள் இருந்தும் ஏன் இன்னும் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தவில்லை?" என்றெல்லாம் லஞ்ச ஒழிப்புத் துறையின் மந்தமான செயல்பாட்டை நீதிமன்றம் நேரடியாகச் சாடியிருக்கிறது.

ஊழலை மூடி மறைக்க முயன்ற விஜய் சர்க்கார்!

ஊழலை மூடி மறைக்க முயன்ற விஜய் சர்க்காருக்கு உயர்நீதிமன்றம் சவுக்கடி கொடுத்துள்ளது.

இந்த அரசு வழக்கறிஞர் நியமன ஊழல் மூலம் பல கோடி ரூபாய் வரை லஞ்சம் பெறப்பட்டதாக செய்திகள் வருகின்றன. இந்த பல கோடி ரூபாய், த.வெ.க. Party Fund க்கு வசூலிக்கபட்டதா? அதுபற்றி விசாரிக்குமா DVAC. இதற்கு பொறுப்பான சட்டத்துறை அமைச்சர் வீட்டில் சோதனை செய்யுமா லஞ்ச ஒழிப்பு துறை?

தூயசக்தி என கொடுத்து வந்த Build up-யை காப்பாற்ற லஞ்ச ஒழிப்புத் துறையை தவெகவின் கிளை அமைப்பாக பயன்படுத்தி வந்தனர். ஆனால் இன்று உயர்நீதி மன்ற மதுரைக் கிளை தூய சக்தியின் லட்சணத்தை தோலுரித்து காட்டியிருக்கிறது. இவர்கள் தூய சக்தியல்ல, TVK ஒரு திருட்டு சக்தி என்பது வெளிப்பட்டுள்ளது.

ஆர்.எஸ்.எஸ். நிர்மல்குமார் தேவையின்றி Take Diversion அரசியல் செய்தது எல்லாம் இந்த மெகா ஊழலை மறைக்கத்தானா? எந்த கேள்விக்கும் பதில் சொல்லாமல் அவதூறுகளை அள்ளிக்கொட்டி மக்களை மடைமாற்றும் அமைச்சர் நிர்மல் குமாரிடம் நீதிமன்றம் கேட்கும் கேள்விகளுக்கு பதில் உண்டா? உத்தமர் வேடம் போட்ட விஜய் சார் எங்கே போனார்? ஏன் அவர் அரசு வழக்கறிஞர் நியமன ஊழலை பற்றி புகார் வந்தவுடன் விசாரிக்க வில்லை? திமுக சார்பில் அளிக்கப்பட்ட புகாரை இனியாவது DVAC விசாரிக்குமா? இல்லை அதற்கும் நீதிமன்றம் உத்தரவிடும் வரை காத்திருக்க போகிறீர்களா?

டேபிளில் பைல் உள்ளது என கதை விட்டீர்களே! ஆனால் உண்மையில் நீதிமன்றத்தின் டேபிளில் தான் தவெக வினர் செய்துள்ள ஊழல் பைல்கள் உள்ளன. அதில் ஒன்றை நீதிமன்றம் தற்போது open செய்துள்ளது. விரைவிலே தவெக அரசின் ஊழல்கள் ஒவ்வொன்றாய் வெளிவரும்.

கள்வன் கையில் வீட்டு சாவியை கொடுத்த கதையாய் தற்போது தமிழ்நாடு தவெக கையில் மாட்டியுள்ளது. விரைவில் இந்த அயோக்கிய கூட்டத்திற்கு தமிழ்நாட்டு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு

இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு!

தமிழ்நாடு மாநில செயலாளர் எஸ்.பாஸ்கரன் அறிக்கை!

சென்னை, அக்.4-

இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் நாடு மாநில செயலாளர் எஸ்.பாஸ்கரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழக மக்கள் மனதில் என்றும் நிரந்தரமாக முதலமைச்சராக குடியிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி (எம்.கே)யின் சார்பாக வாழ்த்துக்களும், வணக்கங்களும்!

RSS மற்றும் BJP இயக்கங்களின் பாசிச இந்துத்துவா மதவெறி கொள்கைகளின் நிழல் கூட தமிழ்நாட்டு மக்களை தீண்டிடக் கூடாது எனும் எச்சரிக்கை உணர்வுடன், தமிழ் மக்களின் மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றை பேணி காத்திட தங்கள் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் வெளிப்படுத்தும் முற்போக்கு கருத்துக்களுக்கும், மேற்கொண்டு வரும் அத்தனை இயக்கங்களுக்கும் எமது இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி (எம்.கே) தொடர்ந்து ஆதரவு அளித்து வருகின்றது.

கடந்த பத்து ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்புச் செயலாளரான ஆர்.எஸ்.பாரதி அவர்களுடன் நானும் எனது கட்சியினரும் தொடர்ந்து தொடர்பிலிருந்து வருகின்றோம்.

2019 மற்றும் 2024 நாடாளுமன்றத் தேர்தல்களிலும், 2021 மற்றும் 2026 சட்டமன்றத் தேர்தலிலும் நாட்டு நலனையும் தமிழ்நாடு மாநில நலனையும் முன்னிட்டு திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியினை எமது இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி (எம்.கே)யின் சார்பாக எந்தவித பிரதிபலனும் எதிர்பாராமல் ஆதரித்து கடுமையாகத் தேர்தல் பணி செய்தோம். அத் தேர்தல்களில் CPI,CPM கட்சிகள் கொடுத்த அழுத்தத்தால் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் எவ்வித ஒத்துழைப்பும், அங்கீகாரமும் எங்களுக்கு கிடைக்காவிட்டாலும் எங்கள் இயக்கத் தோழர்கள் சோர்வின்றி தேர்தல் பணியாற்றினார்கள்.

இன்னும் தெளிவாக, சுருக்கமாக எங்களுக்கு ஏற்பட்ட சோதனைகளையும், வேதனைகளையும் தங்களிடம் தெரிவிக்க நான் கடமைப்பட்டுள்ளேன். 2024ம் ஆண்டு மார்ச் மாதத்தில் சென்னையில் நடைபெற்ற எங்கள் தமிழ்நாடு மாநில மாநாட்டினை முடக்கு வதற்காக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் கொடுத்த அழுத்தத்தால் தமிழக காவல்துறையும், அரசு நிர்வாகமும் கடுமையான பல தொல்லைகளை எங்களுக்கு கொடுத்தன. தங்கள் கவனத்திற்கு வராமல் நடைபெற்ற இந்நிகழ்ச்சிகளால் எங்களது கட்சியின் பெயரையே UCPI என்பதிலிருந்து UCPI (M.K) என நாங்கள் மாற்ற நேர்ந்தது. ஆனால் இத்தனைக்கு பிறகும் இந்திய தேர்தல் ஆணையத்தின் மோசடி தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. விஜய் அவர்களின் ஆட்சிக்கு இடதுசாரி கட்சிகள் காங்கிரஸ் மற்றும் விசிக போன்ற கட்சிகள் மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு துரோகம் செய்து ஆதரவளித்த நிலையிலும் தமிழ் மக்களின் நலன் கருதி நாங்கள் தொடர்ந்து தங்கள் தலைமையிலான திமுக கூட்டணிக்கு ஆதரவாக செயல் பட்டு வருகிறோம்.

அதன் அடிப்படையில் வருகின்ற மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தல்களிலும், புதுச்சேரி மாநிலத்தின் ஒரு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலிலும் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களுக்கு ஆதரவாக எமது இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி செயல்பட்டு வருகின்றது என்பதையும் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோல் இனிவரும் காலங்களிலும் மதவெறி பாசிச பாஜக எதிர்ப்பிலும், மக்கள் விரோத தா.வெ.க. வின் அராஜக ஆட்சியினை எதிர்ப்பதிலும் தங்கள் தலைமையிலான திராவிட முன்னேற்ற கழகம் முன்னெடுக்கும் அனைத்து போராட்டங்களிலும் எமது இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி (எம்.கே)யும் உற்சாகமுடன் பங்கேற்கும் என தோழமையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

உலகத் தமிழர் பேரமைப்பின் நிறுவனர்

பழ. நெடுமாறனின் இளைய மகன் மாணிக்கம் மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 4-

உலகத் தமிழர் பேரமைப்பின் நிறுவனரான பழ.நெடுமாறன் அவர்களின் இளைய மகன் மாணிக்கம் அவர்கள் இயற்கையெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

உலகத் தமிழர் பேரமைப்பின் நிறுவனரான ஐயா பழ. நெடுமாறன் அவர்களின் இளைய மகனும் புத்த துறவியுமான திரு. மாணிக்கம் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகுந்த வருத்தமுற்றேன்.

சமத்துவக் கொள்கைகளையும் தமிழுணர்வையும் ஊட்டி வளர்த்த அன்பு மகனை இழந்து தவிக்கும் ஐயா அவர்களுக்கு, இத்துயர்மிகு வேளையில் என் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஓழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(02.10.2026 - 3.10.2026)

1. ராணிப்பேட்டை மாவட்டம் கலவை அருகே விடுதலைச் சிறுத்தை கட்சி நிர்வாகி ஓட ஓட விரட்டி வெட்டிக்கொலை ....

2. புதுக்கோட்டை இந்திரா நகரில் ஆறு மாத கர்ப்பிணி பெண் கொடூர கொலை .....



3. கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே அசாம் மாநில தொழிலாளி கழுத்தை அறுத்து படுகொலை ...

4. தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் மாயமான மூதாட்டி எரிந்த நிலையில் பிணமாக மீட்பு ...

5. சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் இருந்து கஞ்சா வழக்கில் சிக்கிய கைதி தப்பி ஓட்டம்...



6. செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் அருகே, வீட்டில் தனியாக இருந்த பெண்ணின் கழுத்தை நெறித்து நகைகளை கொள்ளையடிக்க முயற்சி...

7. காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை அருகே தன்னை பிடிக்க வந்த போலீசாரை வெட்டி விட்டு தப்ப முயன்ற ரவுடி சுட்டு பிடிப்பு...

8. சென்னை நம்மாழ்வார் பேட்டையில் இளம் பெண்ணிடம் சில்மிஷம் செய்த ஜிம் மாஸ்டர் சிக்கினார் ...

9. சென்னை வேளச்சேரியில் வீட்டில் தனியாக இருந்த பெண்ணை கத்தி முனையில் மிரட்டி கொள்ளை முயற்சி ....

10. செங்கல்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரி அருகே ரியல் எஸ்டேட் அதிபர் வீட்டு பூட்டை உடைத்து தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் திருட்டு ...

11. சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் கையில் கத்தியுடன் சுற்றி பொதுமக்களை அச்சுறுத்திய வாலிபர் சிக்கினார்...



12. தஞ்சையில் அம்மன் கோவிலில் அம்மன் கழுத்தில் இருந்த தாலி திருட்டு ...

13. விழுப்புரம் மாவட்டம் கோட்டக்கரை கிராமத்தில் அடுத்தடுத்த கோவில்களில் சாமி சிலைகள் திருட்டு ...

14. விழுப்புரம் மாவட்டம் வளவனூர் அருகே அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களிடையே மோதல், இரண்டு பேர் படுகாயம் ...

15. நெல்லை பாளையங்கோட்டையில் ஹோட்டலில் தகராறு செய்தவர்களை தட்டிக்கேட்ட ஓட்டல் ஊழியரை வழிமறித்து சரமாரியாக தாக்குதல் நடத்திய கும்பல் ...

16. சென்னை, பெரம்பூர், கூடுவாஞ்சேரி, தாம்பரம், வியாசர்பாடி அம்பத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் கஞ்சா தாராள புழக்கம் ...

17. சென்னை கிழக்கு கடற்கரை சாலை அக்கரையில் பிரபல உணவகத்தில் 15 செல்போன்கள் திருட்டு ...



196 வது வார்டு கண்ணகி நகரில் காலியாக உள்ள மாநகராட்சி சாலை நடைபாதைகளில், சோழிங்கநல்லூர் தொகுதி எம்.எல்.ஏ. சரவணன் அனுமதி கொடுத்துவிட்டார் என்று கூறி tinkering shed மற்றும் பல்வேறு கடைகளை அமைத்து இவற்றுக்கு மாத வாடகை அல்லது முழு விற்பனை தொகை பெற்றுக்கொண்டு ஆளும் த.வெ.க. வட்டச் செயலாளர்கள் மணி மற்றும் விஜய் ஆகியோர் செயல்படுவதாகவும் இதற்காக மாநகராட்சி அதிகாரிகளை மிரட்டுவதாகவும் பொதுமக்கள் புகார் அளிக்கின்றனர் . இதன் மீது உடனடியாக மாநகராட்சி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.